IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

OS.No.– 383/2009

ஆரம்ப நேரம்: 12.45 PM.

வா.சா.1 சாட்சி கொண்டப்பன் த.பெ.இராமசாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 02.08.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து தாக்கல் செய்த அறிக்கை மற்றும் கோப்புகள் **நீ.ம.சா.ஆ.1** ஆகவும், நீதிமன்ற ஆணையரின் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அ.வ.எண். 499/2009 என்ற வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து தாக்கல் செய்த அறிக்கை மற்றும் கோப்புகள் **நீ.ம.சா.ஆ.3** ஆகவும், நீதிமன்ற ஆணையரின் வரைபடம் **நீ.ம.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

2. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து என்ன சொத்து என்றால் வீடு ஆகும். தாவா சொத்து காண்பிக்ககூடிய அடிப்படை ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.248/4, 248/3 என சரியாக நினைவில்லை.

3. தாவா சொத்தை பற்றி அரசு ஆவணங்களான வரைபடம், சிட்டா, அடங்கல் ஆகியவற்றை பார்த்தேனா என்றால் என் வக்கில் என்ன கேட்டாரோ அதை நான் கொடுத்துட்டேன். தாவா சொத்தின் சிட்டா, அடங்கல், பட்டா, கிஸ்தி ரசீது, புல வரைபடம் ஆகியவற்றை எனது வக்கீல் தாக்கல்

செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது தரப்பில் மேற்படி ஆவணங்கள் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. நான் வீட்டோடதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். தாவா சொத்து என்ன வகை என்று கமிஸ்னர் அறிக்கைப்படி எனது வழக்கறிஞர் மூலமாக படித்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். அது என்ன வகைப்பாடு என்றால் நடபாதை என்பது நம்ம சொத்து என்று சொன்னார். அரசாங்க ஆவணங்களில் தாவா சொத்து என்பது எப்படி இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். வழக்கு சொத்து அரசாங்க ஆவணங்களில் தெரு மற்றும் வீதியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையிலும், வழக்கு சொத்து தெரு மற்றும் வீதியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறாகும். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் தற்போது சர்வே எண் அரசாங்க ஆவணப்படி 248/32 ஆகும் என்றால் சரியல்ல. சர்வே எண்.248/32 என்னவாக ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ. 1 ல் உள்ள அடங்கல், பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. மேற்படி அடங்கலில் தெருவீதி என்று நீ.ம.சா.ஆ. 1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரிந்தும் எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் ஊராட்சிமன்றத்தையோ, ஊராட்சிமன்றத்தலைவரையோ, வட்டார வளர்ச்சி தலைவரையோ, அரசாங்கத்தையோ தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

7. சரவே எண.248/32 அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனவே, ஊராட்சிமன்றத்தையும், அரசாங்கத்தையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றாலும் உரிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமானது எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ. 1 வரைபடத்தில் உள்ள சங்கதிகள் தவறானது என்றால் சரியானதுதான். தாவா சொத்தின் பக்கத்தில் அசல் வழக்கு எண்.499/2009 வழக்கின் வாதி வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் படி ஆறுமுகம் மீது வழக்கு தாக்கல் செய்யாமல் இராவுத்தர் மீது ஏன் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் அவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ளேன்.

9. மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றவேண்டி நான் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள சிமெண்டு ரோடு ஊராட்சிமன்றத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் நான்தான் பராமரித்து வருகிறேன். வழக்கு சொத்து எது என்பது குறித்து அடையாளம் காட்டாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யும் போது வடக்கு பக்கம் பிரதிவாதியின் சகோதரர் ஆறுமுகம் வீடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ. 1 ஆவணம் வழக்கு சொத்திற்கு சென்று வரைபட்டதாகும் என்றால் சரிதான். ஆறுமுகம் வீட்டிற்கு வடக்கு பக்கம்தான் பிரதிவாதி இராவுத்தர் வீடு உள்ளது என்றால் சரிதான். முதன் முதலில் வழக்கு தாக்கல்

செய்யும்போது ஆறுமுகம் மீது வழக்கு தாக்கல் செய்யாமல் இராவுத்தர் மீது வழக்கு தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. எனவே, ஆறுமுகத்திற்கு எதிராக எவ்வித வழக்குமூலமும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல.

11. இராவுத்தரின் வீட்டு தலைவாசல் கிழக்கு பக்கம் என்றால் சரிதான். ஆறுமுகத்தின் வீட்டு தலைவாசல் கிழக்கு பக்கம் என்றால் சரிதான். அந்த சந்து மேற்கு பக்கம் திரும்புகிறது என்றால் சரியல்ல. அந்த சந்து மேற்கு பக்கம் திரும்புவதாகத்தான் வா.சா.ஆ. 1 வரைபடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்குமால் என்ன என்றால் வடக்கு பக்கம் அம்மாசி காலி இடமாக இருந்து தற்போது வீடாக உள்ளது. தெற்கு பக்கம் வெள்ளையம்மாள் வீட்டு சந்துக்கும் தெற்கு. கிழக்கே வருதம்மாள் வீடும். மேற்கே பல வீடுகள் உள்ளது.

12. மேற்படி மேற்கே உள்ள பல வீடுகளுக்கு பாதை வழக்கு சொத்துதான் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் குடி இருக்கவில்லை என்பதால் வழக்கு விபரங்களை என்னால் சரியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அடியில் பி.வி.சி பைப் உள்ளது என்றால் சரிதான். முத்துவேல் இரண்டு ஜன்னல்கள் வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஜன்னல் சந்தை நோக்கியுள்ளது என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி சாட்சி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்: 1.25 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில் கையொப்பமிட்டார்.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.